# பொது நிர்வாக பலன்

அறிக்கை ஆண்டில் வரி வசூலிப்பவர்கள் புறப்பணி அலுவலர்கள் மற்றும் உள்முகப் பதியாளர்களின் உழைப்பால் **2018-2019**ம் ஆண்டு நிலுவையில் இருந்த வரி மற்றும் வரியற்ற இனங்களை வசூல் செய்து வரியினத்தில் நிலுவையில் **11.23** சதவிகிதம், நடப்பில் **62.23** சதவிதமும் வரியில்லாத வரியில்லாத இனங்களில் **22.73** சதவிகிதம் நடப்பில் 62.40 சதவிகிதம் எட்டியுள்ளது.

மேலும் பொதுப்பணி மற்றும் குடிநீர் விநியோகம் அபிவிருத்தி வேலைகளை செவ்வனே செய்து முடிப்பதில் பொறியாளர் மற்றும் அலுவலர்களின் ஒத்துழைப்பு ஈந்ததால் பொதுமக்களுக்கு அறிக்கை ஆண்டில் பயனுள்ள பல பணிகளை செய்து முடிக்க ஏதுவாயிற்று. அனைத்து அலுவலர்களும் நகராட்சியின் முன்னேற்றத்திற்காக திறம்பட பணியாற்றினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆணையாளர்
பண்ணுருட்டி நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
பண்ணுருட்டி.

# பண்ணுருட்டி நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2018–2019

ஆணையாளர் (கூ.பொ)
பண்ணுருட்டி நகராட்சி

தனி அலுவலர் (ம) ஆணையர்
பண்ணுருட்டி.

# பண்ணுருட்டி நகராட்சி

## 2018–2019 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

1. **அ. ஆட்சி அமைப்பும், நிர்வாகமும்**

1886 ஆம்ஆண்டு பண்ணுருட்டி பஞ்சாயத்து பேரூராட்சியாக நிறுவப்பட்டது. அரசாணை (நிலை) எண் 2117 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி உள்ளாட்சி துறை 1966 இல் பண்ணுருட்டி பேரூராட்சி மற்றும் திருவதிகை ஊராட்சி பகுதிகள் மற்றும் கீழ்கண்ட வருவாய் கிராமங்களை உள்ளடக்கி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

77. திருவதிகை மற்றும் இதிலடங்கிய குக்கிராமங்கள் (Hamlet Villages) வருமாறு:
    1. ஆ.ஆண்டிக்குப்பம்
    2. சீரங்குப்பம்
    3. இருளங்குப்பம்
    4. தி.இராசாப்பாளையம்
78. வடகைலாசம்
79. பண்ணுருட்டி
80. வி.ஆண்டிக்குப்பம்
81. விழமங்கலம்

அரசாணை நிலை எண். 533 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 22.03.1975ல் இந்நகராட்சி வருமானத்தை அடிப்படையாக கொண்டு 1.04.1975 ம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

அரசாணை நிலை எண். 715 நாள். 6.10.1989ல் இந்நகராட்சியின் வருவாய் மற்றும் மக்கள் தொகையின் அடிப்படையில் இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 55410 ஆகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 18.03 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

அரசாணை நிலை எண். 133 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 06.06.1996ல் இந்நகராட்சியின் நகர்மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 24–லிருந்து 33 ஆக உயர்த்தப்பட்டது.

## 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு

பண்ணுருட்டி நகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணி (G.O.Ms.No.995) அரசு ஆணையின்படி நடைபெற்று முடிவுற்றுள்ளது. அதன்படி நகரின் மொத்த மக்கள் தொகை 60323 ஆகும். இதில் 30216 ஆண்களும் 30107 பெண்களும் உள்ளடக்கியது.

**2. <u>உறுப்பினர்கள்</u>**

இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை 33

| | | |
|---|---|---|
| **1.** | தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | ... 5 (எஸ்.சி. பொது 3, + எஸ்சி. பெண்.2) |
| **2.** | பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | ... 11 (பொது 9 + எஸ்சி 2) |
| **3.** | பொது | ... 17 (பொது) |

**ஆ. இயக்கும் அலுவலர்கள்**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியின் ஆணையாளராக **01.04.2018** முதல் **08.04.2018** முடிய **திரு. அ.வெங்கடாசலம்,** நகராட்சி பொறியாளர் ஆணையாளர் (பொறுப்பு) பணிபுரிந்துள்ளார்.

**09.04.2018** முதல் **03.09.2018**முடிய **திரு.பி. ஏகராஜ்** அவர்கள் ஆணையாளராக பணிபுரிந்து வந்துள்ளார்.

**04.09.2018** முதல் **03.03.2019** வரை **திரு. அ.வெங்கடாசலம்,** நகராட்சி பொறியாளர் ஆணையாளர் (பொறுப்பு) பணிபுரிந்துள்ளார்.

**04.03.2019** முதல் **14.03.2019** வரை **திரு.எஸ்.மகாராஜன்,** நகராட்சி பொறியாளர் ஆணையர் (பொறுப்பு ) பணிபுரிந்துள்ளார்.

**15.03.2019** முதல் **திரு.எஸ். பிரபாகரன், நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர்** கூடுதல் பொறுப்பாக பண்ணுருட்டி நகராட்சியில் ஆணையர் கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வருகிறார்.

அறிக்கையாண்டில் இந்நகரட்சியின் நகராட்சி பொறியாளர் **திரு. அ.வெங்கடாசலம் 01.04.2018** முதல் **03.03.2019** முடிய பணியாற்றியுள்ளார்.

திரு.எஸ். மகாராஜன், நகராட்சி பொறியாளர் **04.03.2019** முதல் **31.03.2019** வரை பணிபுரிந்து வருகிறார்.

அறிக்கை ஆண்டில் **திரு. ச.கிருஷ்ணராஜன்,மேலாளர்** அவர்கள் **01.04.2018** முதல் **17.02.2019** வரை பணிபுரிந்துள்ளார்.

அறிக்கை ஆண்டில் **திருமதி.என்.லட்சுமி, கணக்கர்** அவர்கள் **18.02.2019** முதல் **19.03.2019** வரை மேலாளர் பணியை கணக்கர் பணியுடன் கூடுதலாக கவனித்து வந்துள்ளார். **20.03.2019**முதல் **31.03.2019** வரை **திரு.ச. கிருஷ்ணராஜன் மேலாளர் அவர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.**

அறிக்கை ஆண்டில் திருமதி.என்.லட்சுமி, கணக்கர் **01.04.2018** முதல் **31.03.2019** வரை தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் துப்புரவு அலுவலராக திரு. டி.சக்திவேல் அறிக்கையாண்டு **01.04.2018** முதல் **31.03.2019** முடிய தொடர்ந்து பணியாற்றி வருகிறார். தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் நகரமைப்பு ஆய்வராக திரு. கே. குணசேகரன் அறிக்கையாண்டு முதல் 01.04.2018 முதல் 08.03.2019 வரை பணியாற்றியுள்ளார்.

திரு. கே. செல்வம், நகரமைப்பு ஆய்வாளர் 09.03.2019 முதல் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் வருவாய் ஆய்வராக திரு. சி..இளங்கோவன், உதவியாளர் வருவாய் ஆய்வாளர் 4.7.2017 முதல் (பொறுப்பாக) 15.03.2019 முடியவும் திரு. ஆர். கோவிந்தசாமி, இளநிலை உதவியாளர் வருவாய் ஆய்வர் கூடுதல் பணியில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். திரு. சோ. கருணாமூர்த்தி , உதவியாளர் 27.03.2019 பிற்பகல் முதல் வருவாய் ஆய்வர் கூடுதல் பணியாக கவனித்து வருகிறார்.

<u>நகராட்சி அலுவலர்கள்/பணியாளர்கள் எண்ணிக்கை விவரம்:–</u>

| | பணியிட விவரம் | காலியிட விவரம் |
|---|---|---|
| 1. நகராட்சி ஆணையர் | ... 1 | |
| 2. நகராட்சி பொறியாளர் நிலை–III | ... 1 | |
| 3. துப்புரவு அலுவலர் | ... 1 | |
| 4. மேலாளர் வகுப்பு––II | ... 1 | |
| 5. கணக்கர் வகுப்பு–IV | ... 1 | |
| 6. உதவி பொறியாளர் | ... 1 | |
| 7. குடிநீர் பணி மேற்பார்வையாளர் | ... 1 | |
| 8. நகரமைப்பு ஆய்வர் | ... 1 | |
| 9. துப்புரவு ஆய்வாளர்கள் | ... 3 | 1 காலியிடம் |
| 10. சத்துணவுத் திட்ட கணக்கர் உதவியாளர் | ... 1 | |
| 11. இளநிலை உதவியாளர்கள் | ...10 | |
| 12. தட்டச்சர் | ... 2 | காலியிடம் (27.07.16) |
| 13. வருவாய் ஆய்வர் | ... 1 | காலியிடம் ( 4.7.17) |
| 14. வருவாய் உதவியாளர்கள் | ... 8 | 2 காலியிடம் ( 1.3.19 *to*) |
| 15. சிற்றறை எழுத்தர்கள் | ... 4 | 2 காலியிடம் |
| 16. துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | ... 4 | 1 காலியிடம் |
| 17. . மகப்பேறு உதவியாளர் | ... 1 | காலியிடம் |
| 18. மகப்பேறு ஆயா | ... 1 | காலியிடம் |
| 19. களப்பணி உதவியாளர் | ... 1 | 1 காலியிடம் |
| 20. மின்னாளர் நிலை––II | ... 1 | |
| 21. பிட்டர் நிலை –II | ... 1 | |
| 22. கம்பியாளர்கள் | ... 2 | |
| 23. மின்பணி உதவியாளர்கள் | ... 2 | |
| **24. ஓட்டுநர்கள்** | ... 5 | 2 காலியிடம் |
| **25. அலுவலக உதவியாளர்கள்** | ... 4 | **2காலியிடம் ( 1.3.19 *to*)** |
| 26. நகரமைப்பு சங்கிலி ஆள் | ... 2 | |
| 27. இரவு காவலர் | ... 1 | |
| 28 மார்க்கெட் காவலர் | ... 1 | காலியிடம் |
| 29. பூங்கா காவலர் | ... 1 | காலியிடம் |
| 30. துப்புரவு பணியாளர்கள் | ... 139 . . . . | 29 காலியிடம் |
| 31. சமுதாய பணி அமைப்பாளர்கள் | – 2 . . . . . | 1 காலியிடம் |
| 32. கணினி உதவி திட்ட அமைப்பாளர் | – 1 | |
| 33. பணி ஆய்வர் | – 1 | |

**3. தேர்தல்கள்**

2011ம் ஆண்டின் திருத்தப்பட்ட நகர்புற சட்டமன்ற வாக்காளர் பட்டியல்படி வாக்காளர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு

| | |
|---|---|
| ஆண் வாக்காளர்கள் | ... 17942 |
| பெண் வாக்காளர்கள் | ... 18581 |
| மொத்தவாக்காளர்கள் | ... 36460 |

06.06.96 ந் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறைஅரசாணை எண்.133ல் ஒதுக்கீட்டின்படி இந்நகராட்சியின் மொத்த வார்டுகள் 33. அவற்றுள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 5 வார்டுகளும் (வார்டு எண்கள்.3,8,9,11,12) பெண்களுக்கு 11 வார்டுகளும் (வார்டு எண்கள்.3 (எஸ்சி) 10,11 (எஸ்சி) 14,15,17,26,30,31 மற்றும் 33) ஒதுக்கப்பட்டுள்ளது. மற்ற வார்டுகள் பொதுவானதாகும். அதன்படி நகரமன்றத் தேர்தலில் திரு. பி. பன்னீர்செல்வம் அவர்கள் நகரமன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற தலைவர், நகரமன்ற உறுபினர்கள் அனைவரும் 24.10.2011 அன்று பதவி பிரமாணம் எடுத்துக் கொண்டனர். 24.10.2016ல் ஐந்து ஆண்டுகள் பதவி காலம் முடிவடைந்து விட்டது. பின்பு

**அரசு ஆணை எண். 146 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள். 24.10.2016ன் படி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொறுப்பு) திரு.அ.வெங்கடாசலம் அவர்கள் தனி அலுவலராக 01.04.2018 முதல் 8.4.2018 வரை பணியாற்றி வந்துள்ளார்.**

09.04.2018 முதல் 03.09.2018முடிய **திரு.பி. ஏகராஜ்** அவர்கள் தனி அலுவலராக பணிபுரிந்து வந்துள்ளார்.

04.09.2018 முதல் 03.03.2019 வரை **திரு. அ.வெங்கடாசலம்,** நகராட்சி பொறியாளர் ஆணையாளர் (பொறுப்பு) தனி அலுவலராக பணிபுரிந்துள்ளார்.

**3(அ) தேர்தல்கள்**

2016ம் ஆண்டின் திருத்தப்பட்ட நகர்புற சட்டமன்ற வாக்காளர் பட்டியல்படி வாக்காளர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு:——

| | |
|---|---|
| ஆண் வாக்காளர்கள் | ... 24424 |
| பெண் வாக்காளர்கள் | ... 23286 |
| மூன்றாம் பாலினத்தவர் | ... 1 |
| மொத்தவாக்காளர்கள் | ... 47711 |

6.6.96 ந் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறைஅரசாணை எண்.133ல் ஒதுக்கீட்டின்படி இந்நகராட்சியின் மொத்த வார்டுகள் 33. அவற்றுள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 5 வார்டுகளும் (வார்டு எண்கள்.3,8,9,11,12) பெண்களுக்கு 11 வார்டுகளும் (வார்டு எண்கள்.3 (எஸ்சி) 10,11 (எஸ்சி), 14,15,17,26,30,31 & 33) ஒதுக்கப்பட்டுள்ளது. மற்ற வார்டுகள் பொதுவானதாகும்.

<u>குழுக்கள்</u>

மேலே குறிப்பிட்டுள்ள குழுக்கள் நடத்திய கூட்டங்களும், பொருட்களும் பின்வருமாறு:–

| | நடந்த கூட்டங்களின் எண்ணிக்கை. | பொருட்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. ஒப்பந்தக்குழு | –– | –– |
| 2. வரி மேல்முறையீட்டுக்குழு | –– | –– |
| 3. நியமனக்குழு | இல்லை. | இல்லை. |

4. மன்றக் கூட்டங்கள் (2017–2018 ) 01.04.2018 முதல் 28.02.2019 முடிய நடைபெற்ற மன்ற கூட்டங்களின் விவரம்.

| சாதாரணம் | | அவசரம் | | சிறப்பு | |
|---|---|---|---|---|---|
| கூட்ட எண்ணிக்கை. | பொருள் | கூட்ட எண்ணிக்கை | பொருள் | கூட்ட எண்ணிக்கை | பொருள் |
| | 314 | | 28 | | 1 |

6. <u>மேலாளுகை</u>

அறிக்கையாண்டில் 1.4.2000 முதல் புதிய கணக்கு வைப்புமுறைகளின்படி ஆளுகைக்கும், வரிவசூல் பிரிவு அலுவலர்களுக்கும் ஊதியம் மற்றும் படிகளுக்காக (ஆணையர் நீங்கலாக) ரூ. 249.56 இலட்சம் செலவிடப்பட்டது. கடந்த ஆண்டு இந்த இனத்துக்காக ரூ. 273.81 இலட்சம் செலவிடப்பட்டது. அறிக்கையாண்டில் அச்சு மற்றும் படிவங்கள் வாங்கும் வேலை ரூ. 67994 /– செலவு செய்யப்பட்டுள்ளது.

2. <u>போக்குவரத்து</u>

7. <u>பணிக்குழு</u>

அறிக்கையாண்டில் திரு.அ.வெங்கடாசலம் நகராட்சி பொறியாளராக நிலை –III, ஆக 4.3.2019 வரை பணியாற்றி வந்துள்ளார். 05.03.2019 முதல் திரு.எஸ்.மகாராஜன், நகராட்சி பொறியாளராக பணியாற்றி வருகிறார். இந்நகராட்சி வளர்ச்சி பணிகளுக்கு நிலை–II நகராட்சி பொறியாளர் பணியிடம் அவசியம் தேவைப்படுகிறது. இப்பணியிடத்தை தோற்றுவிக்க நிர்வாக அனுமதி எதிர் நோக்கப்படுகிறது.

<u>பணிகள் விவரம் –</u>

<u>2018–2019–ம் ஆண்டின் திட்டப்பணிகள் குறித்த விவரம்</u>

1. தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் 2018–2019ம் ஆண்டின் கீழ் மதிப்பீடு 200.00 இலட்சங்களில் வார்டு எண்.11,13,17,21,29ல் தார்சாலை மற்றும் சிமெண்ட் சலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

2. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2018–19) ன் கீழ் மதிப்பீடு ரூ.31.00 இலட்சங்களில் வார்டு 26 குப்பம்மாள்தெருவில் ( ஆனந்தா நகர்) மற்றும் வார்டு 16 திருவதிகை ஸ்ரீவீரட்டேஸ்வரர் கோயில் கிழக்குமாட வீதியில் சிமெண்ட் சாலை அமைக்கும்பணிக்கு பணியினை வழங்கப்பட்டுள்ளது வார்டு 18 மற்றும் 21 அன்வர்ஷாநகர் மற்றும் காமராஜ் நகர் மெயின் தெரு வார்டு 01 பானுபிரியா நகர் விரிவாக்கம் வார்டு 11 தமிழ்நாடு வீட்டுவசதிவாரிய குடியிருப்பு பகுதிகளில் தார்சாலை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.44.98 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

   மேலும் வார்டு 11 அசோக் நகர் வார்டு 12 செட்டிப்பட்டறை காலனி மற்றும் வார்டு 13 பாலூர் மெயின்ரோடு முதல் மொட்டலிங்கம் தெரு இணைப்பு வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு 41.00 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

3. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2018–19) ன் கீழ் வார்டு13 திருவதிகை அக்காத்தம்மன்கோயில்தெரு எதிர்புறம் பொதுக்கழிவறை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.17.00 இலட்சத்திற்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

4. தூய்மை இந்தியா திட்டம் (*SBM 8th SHBC FUND* 2018–19 (*MCC*)திட்டத்தின் கீழ் பணிகள் எடுக்கப்பட்டுள்ள விவரம்

   1. வார்டு 11 அ. மனிநகரில் மதிப்பீடு ரூ.58.00 இலட்சத்தில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைத்தல் பணிக்கு பணியானை வழங்கப்பட்டுள்ளது.
   2. வார்டு 17 நேதாஜி நகரில் மதிப்பீடு ரூ.58.00 இலட்சத்தில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைத்தல் பணிக்கு பணியானை வழங்கப்பட்டுள்ளது.
   3. வார்டு 28 விஸ்வநாதன் நகரில் மதிப்பீடு ரூ.58.00 இலட்சத்தில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைத்தல் பணிக்கு பணியானை வழங்கப்பட்டுள்ளது.
   4. இந்நகராட்சியில் குப்பைகள் தினந்தோறும் சேகரிக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.11.20 இலட்சத்தில் இரண்டு இலகுரக வாகனங்கள் (*LCV*) புதியதாக வாங்கப்பட்டுள்ளன.
   5. இந்நகராட்சிக்க குப்பைகிடங்கு பணிக்கு பசுமைக்உரக்குடில் பணிக்கு மதிப்பீடு ரூ.54.00 இலட்சத்தில் 20 எண்கள் (*BOV*) வாகனம் சப்ளை செய்யும் பணிக்கு பணியானை வழங்கப்பட்டுள்ளன.
   6. வார்டு 17 ல் நேதாஜி நகரில் சேமிப்பு கிடங்கு அமைத்தல் பணிக்கு மதிப்பீடு 18.00 இலட்சத்தில் பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

<u>கல்வி நிதி 2018–2019</u>

1. வார்டு எண்.4 தர்கா வண்டிமேடு நகராட்சி முஸ்லீம் துவக்கப்பள்ளியில் முதல் தளத்தில் மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்தில் இரண்டு வகுப்பறைகள் கட்டும் பணிக்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது.
2. வார்டு எண்.2 விழமங்கலம் நகராட்சி துவக்கப்பள்ளியில் மதிப்பீடுரூ.22.00 இலட்சத்தில் இரண்டு வகுப்பறைகள் கட்டும் பணிக்கு பணியானை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
3. வார்டு எண். 26 அருள்ஜோதி நகர் நகராட்சி துவக்கப்பள்ளியில் மதிப்பீடு ரூ.2.50 இலட்சம் செலவில் பராமரிப்பு பணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# *WATER ATM CSR FUND 2018-2019*

1. பண்ணுருட்டி நகராட்சியில் குடிநீர் திட்டம் 2018–2019ன் கீழ் வார்டு 17 நேதாஜி நகரில் மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு பணியானை வழங்கப்பட்டுள்ளது.
2. பண்ணுருட்டி நகராட்சியில் குடிநீர் திட்டம் 2018–2019ன் கீழ் வார்டு 18 லட்சுமிபதி நகரில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு பணியானை வழங்கப்பட்டுள்ளது.
3. பண்ணுருட்டி நகராட்சியில் குடிநீர் திட்டம் 2018–2019ன் கீழ் வார்டு 16 திருவதிகை மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் மதிப்பீடு ரூ.16.00 இலட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு பணியானை வழங்கப்பட்டுள்ளது.
4. வார்டு 21 பேருந்து நிலையம் பின்புறம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் விஜயம்பாள் லேஅவுட்டில் மதிப்பீடு ரூ.16.00இலட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது.
5. வார்டு 28 நகராட்சி அலுவலக பின்புறம் மேல்நிலைநீர்த்தேக்க தொட்டி அருகில் மதிப்பீடு ரூ.16.00இலட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு பணியானை வழங்கப்பட்டுள்ளது.
6. வார்டு 25 படைவீட்டம்மன் கோயில் எதிரில் மதிப்பீடு ரூ.16.00 இலட்சதில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது.
7. வார்டு 28 சரஸ்வதிநகரில் மதிப்பீடு ரூ.16.00 இலட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

## 9. கீழ்கண்ட சாலைகள் நெடுஞ்சாலைத்துறை மற்றும் தேசிய நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிப்பில் இருந்து வருகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | கீ.மீ |
|---|---|---|
| 1. | கடலூர் சித்தூர் சாலை SH.9 | 6.800 |
| 2. | கடலூர் – திருக்கோயிலூர் – சங்கராபுரம் சாலை எஸ்.எச்.(டி. ரசாப்பாளையம் முதல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் வரை) | 4.283 |
| 3. | கடலூர் – திருக்கோயிலூர் – சங்கராபுரம் சாலை எஸ்.எச்.(தேரடி முதல் வி. ஆண்டிக்குப்பம் வரை) | 1.419 |
| 4. | விக்கிரவாண்டி – கும்பகோணம் தஞ்சாவூர் சாலை என்எச் 45சி | 2.000 |
| 5. | பழைய விக்ரவாண்டி – கும்பகோணம் தஞ்சாவூர் சாலை எஸ்எச் (வட்டாட்சியர் அலுவலக சாலை) | 0.635 |
| 6. | காந்திரோடு (ODR) தட்டாஞ்சாவடி முதல் தேரடி வரை | 0.560 |
| 7. | பக்கிரி பாளையம் சாலை | 1.000 |
| 8. | கரும்பு வளர்ச்சி திட்ட சாலை (துட்டாஞ்சாவடி முதல் கொக்குபாளையம் ரோடு வரை) | 0.600 |
| 9. | கரும்பு வளர்ச்சி திட்ட சாலை (ODR)விக்கரவாண்டி – கும்பகோணம் தஞ்சாவூர் சாலை முதல் சாத்திப்பட்டு வழி இருளன்குப்பம் வரை ) | 2.600 |
| | மொத்தம் | 19.897 கி.மீ |

நகராட்சியால் பராமரிக்கப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 79.63 கி.மீ. ஆகும். இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் பலதரப்பட்ட சாலைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| சாலைகளின் வகைகள் நீளம். | 31.03.2011 சாலை களின் நீளம். | அறிக்கையாண்டில் சாலைகளின் மாற்றம். | 31.3.2012ல் சாலைகளின் நீளம். |
|---|---|---|---|
| கி.மீ. | கி.மீ. | கி.மீ | |
| 1. தூசியற்ற சாலை | 26.900 | (–) 5.25 | 32.150 |
| 2. கான்கிரீட்சாலை | 36.790 | (–) 1. 86 | 38.650 |
| 3. கருங்கற்தளச் சாலை | 3.100 | (–) 2.93 | 6.030 |
| 4. செம்பூரான்கல் சாலை | 0.300 | (–) 4.50 | 4.800 |
| | 67.09 | | 79.630 |

இந்நகராட்சி எல்லைகளில் உள்ள சாலைகளின் நிலைமை ஓரளவு திருப்திகரமாக இருந்தது. சாலை பராமரிப்பு மற்றும் புதியதாக சாலையமைக்கும் பகுதிகளை நகராட்சி பொறியாளரும் மற்றும் செங்கை மண்டல நிர்வாகப் பொறியாளரும் மேற்பார்வை செய்தனர். மூலதனச் சாலை வேலைகள் ஒப்பந்தக்காரர்களை கொண்டு செய்யப்பட்டது.

இந்நகராட்சிக்குச் சொந்தமான கல் தோண்டி எடுக்குமிடம் ஏதுமில்லை. 40 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள எம். குண்ணத்தூர் கல் தோண்டி எடுக்குமிடத்திலிருந்து கருங்கல் சரளை லாரி மூலம் மற்றும் வண்டிகள் மூலம் கொண்டு வரப்பட்டு சாலை வேலைக்கு உபயோகப்படுத்தப்பட்டது.

நகரிலுள்ள பெருஞ்சாலைகளில் போக்குவரத்து தாராளமாக இருந்தது.

அறிக்கையாண்டில் சாலைகளுக்காக மூலதனச் செலவு சாலைகள் பராமரிப்புக்கு ரூ. 90.05 லட்சம் செலவிடப்பட்டது.

பண்ணுருட்டி நகர எல்லையில் பேரூந்து நிலைய தென்புறம் உள்ள கடலூர் சாலை விரிவு அபிபிருத்தி திட்டம் எண்.1ல் உள்ள 60அடி "டிடி"திட்ட சாலையின் ஒரு பகுதி தனி நபர் ஐவருக்கு சொந்தமானதாகும். இந்த பணிநீண்டகாலமாக முடிக்கப்படாமல் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் பெரும் பாதிப்புக்கும் இன்னல்களுக்கும் ஆளாக இருந்து வந்த இடத்தினை இந்நகரமன்ற மூலம் பெரும் முயற்சி எடுத்து நிலம் கிரயம்செய்ய கீழ்க்காணும் சர்வே எண்ணில் உள்ள 6845 சதுரடி இடம் ரூ.9,76,121/—க்கு நகராட்சியால் மாவட்ட ஆட்சியரின் பேச்சு வார்த்தை குழு மூலம் விலை நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் கிரையம் பெறப்பட்டுள்ளது. மேற்படி கிரயம் பண்ணுருட்டி சார்பதிவாளர்அலவலகத்தில் 23.2.2001ல் பதிவு எண்.190,191,192,193 மற்றும் 194 ஆகிய எண்ணில் பதிவு செய்து நகராட்சி வசம் ஏற்கப்பட்டது. மேற்படி கிரையம் பெற்ற பகுதியில் ரூ.1,20,000 மதிப்பீட்டில் தார்சாலை மற்றும் சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது.

<u>வடிகால்</u>

இந்நகரில் இருந்து வெளியேறும் கழிவுநீர்கள் மொத்தமாக இறுதியாக இந்நகரின் வடக்குப்பகுதியில் அமைந்துள்ள வாலாஜா வடிகால் மூலம்தான் வெளியேறவேண்டும். இந்த வடிகால் பொதுப்பணித்துறைக்கு சொந்தமானதாக இருந்தாலும் கழிவுநீர் செல்ல மட்டுமே பயன்படுவதால் பொதுப்பணித்துறையினர் பராமரிப்பு பணி செய்ய மறுத்துவிட்டனர். ஒரு பகுதி வடிகால் அமைப்பு நகராட்சி மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனை முழுமையாக பராமரிப்பு பணி செய்ய வேண்டுமேயானால் உத்தேசமாக ரூ.200.00லட்சம் வரை தேவைப்படும். மேலும் இந்நகரில் முக்கிய வீதிகள் மற்றும் கடை வீதிகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர்கள் வெளியேற இயலாமல் இருந்த கால்வாய்களை சீர் செய்து புதிய கால்வாய்கள் கட்டி பிரதான கழிவுநீர் வடிகாலில் சென்றடைய இணைப்பு செய்யப்பட்டுள்ளது.

<u>பாலங்கள்,ஆறு உடைப்பாதைகள் மதகுகள்</u>

அறிக்கையாண்டில் ஏதும் இல்லை.

**9. <u>தங்குமிடங்கள், சத்திரங்கள், தண்ணீர் தொட்டிகள்</u>**

அ. பண்ணுருட்டி மருத்துவமனைச் சாலையில் நெடுஞ்சாலைத் துறையினரால் ஒரு பயணிகள் தங்குமிடம் (இரண்டு பகுதிகள்) நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் சத்திரம் மற்றும் தண்ணீர் தொட்டிகள் ஒன்றும் பராமரிக்கப்படவில்லை.

## 10. தெருவிளக்கு வசதி

இந்நகராட்சியில் 2013 எண்கள் தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த தெரு விளக்குகளை நல்லமுறையில் பராமரிக்க 600 எண்கள் தெரு விளக்குகளுக்கு ஒரு மின்கம்பியாளர், ஒரு மின்பணி உதவியாளர் என்ற வீதம் பணியாளர் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு மூன்று மின் கம்பியாளர்கள், மூன்று மின்பணி உதவியாளர்கள் பணியிடம் தேவையாகும். தற்போது இரண்டு மின்கம்பியாளர், இரண்டு மின்பணி உதவியாளர்கள் மட்டுமே உள்ளனர். மேற்கொண்டு ஒரு மின்கம்பியாளர், மின்பணி உதவியாளர் பணியிடம்அரசு அளவுகோல்படி பணியிடம் தோற்றுவிக்க பிரேரணை அனுமதிக்கு சமர்பிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. இருந்த போதிலும் தெருவிளக்குகள் பராமரிக்க தற்போது உள்ள பணியாளர்களை கொண்டு மிக நல்ல முறையில் புகாருக்கு இடமின்றி பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் உள்ள சாலை விளக்குகள் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | 1.4.2018 ல் இருந்த விளக்குகள். | 31.3.2019ல் உள்ள விளக்குகள் |
|---|---|---|
| 1. குழல் விளக்குகள். | 1600 | 1600 |
| 2. 3x360 CFl விளக்குகள் | 215 | 215 |
| 3. சோடியம் விளக்குகள் | 190 | 190 |
| 5. உயர்கோபுர விளக்குகள் | 8 | 8 |
| மொத்தம். | 2013 | 2013 |

### தெரு விளக்கு

**தனியார் மயம்**

33 வார்டுகளிலும் 4’x40 வாட்ஸ் குழல் விளக்குகள் தனியார் வசம் பராமரிப்புக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. சோடியம் விளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. குறித்த நேரத்தில் விளக்குகள் எரிய மற்றும் அணைக்க தானியங்கி சுவிட்சுகள் 50 பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், சென்டர் மீடியன் அமைப்பு விளக்குகள் பழுது நீக்கி செய்திட நிலையிலுள்ள டெஸ்லரை கொண்டு டிவிஸ் கம்பெனியில் மாற்றம் செய்து தெரு விளக்கு பராமரிப்பு தனியாக மாற்றப்பட்டுள்ளது.

15.9.89 வரை தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த தெரு விளக்குகள் நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை அரசாணை எண்.344, நாள்:9.6.89 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.48665/89/இ1, நாள்:28.8.89ன்படி பண்ணுருட்டிநகராட்சிக்கு பராமரிப்பு செய்ய ஒப்படைக்கப்பட்டு 15.9.89 முதல் இந்நகராட்சியினால் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

<u>விளக்குகள் செலவு</u>

அறிக்கையாண்டில் சாலை விளக்குகள் மின் கட்டணத்திற்கு,பராமரிப்பிற்கும் ரூ. 55,00,000/– செலவிடப்பட்டது.

## 3. <u>கல்வி</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை, சென்னை–5 அவர்களின் கடிதம் 3722/90–2,நாள்:19.2.90ன் பேரில் அனைத்து பள்ளிகளின் பராமரிப்பு மற்றும் பணி,ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்கள்,படியும்

மாதாந்திர ஊதியம் ஆகிய அனைத்தும் 1.4.90 முதல் ஆசிரியர்களின் நிர்வாகம் குறித்து அனைத்தும் அரசினருக்கு மாற்றம் செய்யப்பட்டு அறிக்கையாண்டில் அரசினரால் பராமரிக்கப்பட்டுவருகிறது. அரசு (கல்வித்துறை) ஆணை எண்.347, நாள்:9.3.90ன்படி அனைத்து ஆசிரியர்களின் மாதந்திர ஊதியம் அரசினரால் நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது.

<u>பள்ளிக் கட்டிடம்</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான அனைத்து பள்ளிக் கட்டிடங்களை மராமத்து வேலைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேலும் வார்டு 26 அருள்ஜோதி நகர்நகராட்சி துவக்கப்பள்ளியில் பராமரிப்பு பணி நடைபெற்று வருகிறது.

நகராட்சி பகுதியில் அனைத்து நகராட்சி பள்ளி கட்டிடங்களும் கான்கிரீட் தளமாக மாற்றியமைக்கப்பட்டது

<u>நூலகம்</u>

காந்தி பூங்காவிலுள்ள நகராட்சி சொந்தக் கட்டிடத்தினில் ஒரு நூலகமும்,வாசக சாலையும் தொடர்ந்து இயங்கி வருகின்றன. நகராட்சி வாசக சாலையில் 7 தமிழ் நாளேடுகளும், 4 ஆங்கில நாளேடுகளும், 15வாராந்திர ஏடுகளும், 3 மாதாந்திர ஏடுகளும் வரவழைக்கப்படுகின்றன. தினமும் சுமார் 500 நபர்கள் அவைகளைப் படித்து பயன் பெறுகின்றனர். இது தவிர உள்ளூர் நூல்நிலையக் குழுவினரால் இரண்டு நூல்நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இரண்டு அய்யன் திருவள்ளுவர் படிப்பகம் தொடங்கப்பட்டுள்ளது. புதியதாக பேருந்து நிலைய தென்புறம் நகராட்சிக்கு சொந்தமான நூலகம் கட்டி பயன்பாட்டில் உள்ளது

## 4. <u>பொதுச்சுகாதாரம்</u>

### <u>அ. மருத்துவ நிவாரணம்</u>

**24. நோயாளிகள்** ... இல்லை

**25. <u>இடவசதியும், தளவாடங்களும்</u>**

இந்நகரில் அரசு மருத்துவமனை ஒன்றும் நகர ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்ற இயங்கி வருகிறதது. இயங்கி வருகிறது. நகராட்சியால் மருத்துவமனை எதுவும் நடத்தப்படவில்லை.

பிறப்பு =410 $x1$000/6000 =6.4%

**26.. <u>நோய்த்தடுப்பு</u>**

1. இந்நகராட்சியில் சுகாதார அதிகாரி 2018–2019ல் பணியிடம் ஏதும் இல்லை

2. துப்புரவு அலுவலர் பணியிடம் உள்ளது. தற்சமயம் அப்பணியில் ஒரு துப்புரவு அலுவலர் பணிபுரிந்து வருகிறார்.

3. துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடத்தில் 3 துப்புரவு மேற்பார்வையாளரும் பணிபுரிந்து வருகின்றார்கள் 1 பணியிடம் காலியாக உள்ளது

4. நகராட்சியில் மூன்று துப்புரவு ஆய்வாளர்கள் பணியிடத்தில் இரண்டு துப்புரவு ஆய்வாளர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். 1 பணியிடம் காலியாக உள்ளது

**27. <u>பிறப்பு விகிதம் மற்றும் தாய் சே நலம்</u>**

**அறிக்கையாண்டில் 410 பிறப்புகள்மற்றும் இறப்புகள் 370 பதிவு செய்யப்பட்டது. பிறப்புவிகிதம் 6.4 % ஆக இருந்தது.**

**<u>28. இறப்பு விகிதம் கொள்ளைநோய் மற்றும் பிராந்திய நோய்களும்</u>**

அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 370ஆகும். இது ஆயிரத்துக்கு 5.85 % மரண விகிதமாகும். கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 301 ஆகும்.

இந்த ஆண்டு காலராவினால் இறப்பு இல்லை. அறிக்கை ஆண்டில் ஜுரம்,சீதபேதி காசநோய்கள் சம்பந்தமாக இறப்பு விபரமும் ஒரு ஆயிரத்துக்கு அதனுடைய விகிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| | ஆயிரம் ஜனத் தொகைக்கு |
|---|---|
| 1. ஜுரம் | –– |
| 2. சீதபேதி | –– |
| 3. காசநோய் | –– |
| 4. காலாரா | –– |
| 5. பெரியம்மை | –– |
| 6. இதர காரணங்கள் | 335 |
| மொத்தம் .. | 335 |

<u>காலரா நோய்</u>

அறிக்கையாண்டில் இந்நகராட்சி எல்லைக்குள் காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எவருமில்லை.

<u>இதர நோய்கள்</u>

அறிக்கையாண்டில் நகரில் பெரியம்மை நோயால் யாரும் பாதிக்கப்படவில்லை. இந்நோய் பரவுவது பூரணமாக தவிர்க்கப்பட்டுள்ளபடியால் முதன்முறையாக அம்மை குத்தப்பப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது

<u>பிளேச்/ சார்ஸ்/எயிட்ஸ்</u>

அறிக்கையாண்டில் பிளேக், சார்ஸ், எய்ட்ஸ் ஆகிய நோயினால் பாதிக்கப்ட்டவர்கள் எவருமில்லை

<u>நரம்பு சிலந்தி நோய்</u>

அறிக்கையாண்டில் நரம்பு சிலந்தி வியாதியால் எவரும் பாதிக்கப்படவில்லை

<u>கொசு ஒழிப்பு</u>

தேசிய யானைக்கால் நோய் தடுப்புச் சட்டம் செயல்பட்டு வருகிறது. நகரில் மூன்றில் ஒரு பகுதி தேசீய யானைக்கால் நோய் தடுப்புத் திட்ட பிரிவினராலும் மற்ற இரண்டு பகுதிகள் நகராட்சியினராலும் இத்திட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் 4 கொசு தடுப்பு மருந்தடிக்கும் தொழிலாளர்கள் மருந்து தெளித்தல் மற்றும் கழிவு நீர் கால்வாய்கள் சுத்தம் போன்ற வேலைகள் கவனித்து வருகின்றனர். இதிட்டத்திற்காக அறிக்கையாண்டில் ரூ. **2,42,835/–** செலவு செய்யப்பட்டடது. மேலும் அறிக்கையாண்டில் நகரில் கொசுக்களை முற்றிலுமாக ஒழித்திட புகை மருந்து *மூலம் மாதத்திற்கு இருமுறை நகர்பகுதியில் கொசுமருந்து அடிக்கப்பட்டு கொசு ஒழிக்கப்பட்டு வருகிறது. இதனால் டெங்கு காய்ச்சல், சிக்கன் குன்னியா யானைக்கால் நோய்* மூளைக்காய்ச்சல், மலேரியா நோய் மற்றும் கொசுவால் பரவும் இதர நோய்கள் வராமல் பாதுகக்கப்படுகிறது. நிந்தர மற்றும் தற்காலிக நீர்தேக்கம் குட்டைகளில் ஆயில் பால்ஸ் போட்டு கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டு வருகிறது. நன்னீரில் டெமிபாஸ் மருந்து உபயோகப்படுகிறது.

**29.** <u>துப்புரவு</u>

தினமும் நகரில் சேரும் குப்பையை 2 டிப்பர் லாரிகள் 1 டம்பர் பிளேசர் மற்றும் 3 மினி டெம்போ மூலம் எடுத்து சென்று அப்புறப்படுத்தப்படுகிறது. தினசரி சராசரி 17 மெட்ரிக் டன் குப்பையும் கழிவுநீர் கால்வாயிலிருந்து சுத்தம் செய்து எடுக்கப்பட்ட மன் குப்பைகளும் அப்புறப்படுத்தப்படுகிறது. கலவை உரக்கிடங்கில் *JCB* வாகனம் பயன்படுத்தப்பட்டு குப்பை தள்ளி விடப்படுகிறது.

அறிக்கையாண்டில் துப்புரவு பணியாளர்களுக்காக **ரூ.1,70,69,975/–**செலவு செய்யப்பட்டது.

**28.02.2018** ல் இந்நகரத்தில் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 14901 அதில் கழிப்பிடங்கள் உள்ள வீடுகளின் எண்ணிக்கை 10973 பொதுசுகாதார சட்டத்தின் கீழ் எல்லா வீடுகளுக்கும் நச்சுத் தொட்டிக் கழிப்பறை அமைக்கப்பட வேண்டுமென வற்புறுத்தப்படுகிறது. இந்நகரில் பெரும்பாலான குடியிருப்பு வீடுகளுக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் மாட்டு வண்டிகள் மூலம் குப்பைகளை அகற்றும் முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. மேலும் இந்நகராட்சியில் முக்கிய பகுதிகள் என 33 வார்டுகளிலும் குப்பை அகற்றப்பட்டு வருகிறது. மேலும் குப்பைத் தொட்டிகள் எடுக்கப்பட்டு குப்பை தொட்டிகள் இல்லா நகரமாக அறிவிக்கப்பட்டு செயல்படுகிறது. மேலும் 23 வார்டுகளில் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்டு பெறப்படுகிறது. பின்பு உரியமுறையல் அப்புறப்படுத்தப்படுகிறது. இரவு நேரங்களில் ஒரு லாரி நியமிக்கப்பட்டு தினசரி மார்கெட் மற்றும் கடை வீதியில் குப்பைகள் அகற்றப்பட்டு வருகிறது. மேலும் ஒரு லாரி நியமிக்கப்பட்டு திருமண மண்டபம், ஒட்டல் போன்ற இடங்களில் இரவில் குப்பைகள் அகற்றப்படுகிறது. நகரின் முக்கியவீதிகள் தினசரி மூன்று முறை குப்பைகள்

அகற்றப்படுகிறது.மொத்த குப்பை உருவாக்குபவர்கள் என 9 நிறுவனங்களை கண்டறிந்து அந்நிறுவனங்கள் மூலம் 0.5 டன் குப்பை அளவிற்கு அவர்களின் பொறுப்பிலேயே உரமாக்கிட பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் நலனிற்காக நகராட்சி பேரூந்து நிலையம் மற்றும் தினசரி நாளங்காடியில் கட்டணம் செலுத்தி உபயோகப்படுத்தும் மல அறை மற்றும் குளியலறை அறிக்கை ஆண்டில் பேரூந்து நிலைய கட்டண கழிப்பறை ரூ.821000/– தினசரி நாளங்காடி கட்டணக் கழிப்பறை ரூ.360500/–வருவாய் வரப்பெற்றது

கொசு புழுக்கள் உருவாகும் கொள்கலன்களை அழித்திடவும் பொதுமக்களிடையே தொற்று நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் மாவட்டாட்சியர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சுயஉதவிக்குழுவினை சேர்த்து தற்காலிக பணியாளர்கள் 50 பேர்கள் நியமித்து பணி மேற்கொள்ளப்படுகிறது.

இந்நகரில் வீடுகளில் உள்ள கழிப்பிடங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. நீர்மல அறைகள் | ...... | 10,544 |
| 2. ஆர். சி.ஏ.பி கழிப்பிடம் | ...... | –– |
| 3. தூய்மை இந்தியா திட்டம் தனிநபர் கழிவறை கட்டும் திட்டம் | | 712 |

இந்நகரில் அறிக்கையாண்டில் 15 சமுதாய கழிப்பிடங்கள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>உரம் தயாரிப்பு</u>

நகராட்சி மூலம் மணி நகரில் நுண்ணுயிர் உரமாக்கும் மையமும்,காமராஜ் நகர் வாட்டர் டேங்க் அ.ப சிவராமன் நகர் வாட்டர் டேங்க்,ஏஎம்எஸ் நகர் மற்றும் பக்கிரிபாளையம் அரசு குடியிருப்பு வாரியம் ஆகியஇடங்களில் சிறிய நண்ணுயிர் உரமாக்கம் மையங்களும் அமைக்கப்பட்டு அம்மையங்களில் இவ்வாண்டில் 50 டன் உரம் தயாரிக்கப்பட்டு நகர் பகுதியில் வசிக்கும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

நகராட்சி பணியாளர்களின் மூலம் வாரந்தோறும் புதன்கிழமை மட்டும் வீடுகள் தோறும் உலர் கழிவுகளை தனியாக சேகரிப்பட்டு அவ் உலர் கழிவுகளை அலுவலர்கள் முன்னிலையில் விற்பனை செய்து அதன் மூலம் தொகையினை அப்பகுதியில் பணிபுரியும் பணியாளர்களுக்கே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி வழங்கப்பட்டு வருகிறது. 2017–18ல் மொத்தம் 150 உலர் டன் உலர் கழிவுகள் சேகரிக்கப்பட்டு ரூ. 10.00 லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

<u>உணவு கலப்படம்</u>

05.08.2011 ந் தேதி முதல் தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை என்கின்ற புதிய துறை உருவாக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வந்த உணவு ஆய்வாளர்களை மேற்படி துறைக்கு மாற்று பணியாக பணி அமர்த்தப்பட்டு உணவு பாதுகாப்பு அலுவலர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றனர். மேலும் உணவு பாதுகாப்பு சம்மந்தமாக/ உணவு மாதிரி எடுக்கும் பணிகள் அனைத்தும் உணவு பாதுகாப்பு துறை மூலமே செயல்படுத்த இயலும். எனவே இனி உணவு மாதிரி எடுக்கும் பணிக்கும் நகராட்சி நிர்வாகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எனவே உணவு மாதிரி எடுக்கும் பணியினை அத்துறையினரே மேற்கொண்டு வருகின்றனர்.

<u>அபாயகரமானதும் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் கீழ் தொழில் உரிமங்கள்</u>

இந்நகரத்தில் அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் நடத்தப்படுவதற்கு துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. இத்தொழில் நடத்துவதற்கு கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டு அறிக்கையாண்டில் ரூ. **198760/–** கட்டணம் வசூலிக்கப்பட்டது. இந்நகரில் இத்தலைப்பின் கீழ் **950** தொழில்கள் நடத்தப்பட்டது.

<u>சந்தைகளும்,விழாக்களும்</u>

இந்நகரத்தில் அங்கீகரிக்கப்பட்ட திருவிழாக்கள் எதுவும் இல்லை. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் உரூஸ் பண்டிகைக்காக சுகாதார ஏற்பாடுகள் செய்துக் கொடுக்கப்படுகின்றது. தூய்மை பகுதிகளை மட்டும் நகராட்சியால் செய்து கொடுக்கப்படுகிறது. ஆற்றுத் திருவிழாவிற்கான ஏற்பாடுகளை குறைந்த செலவில் நகராட்சியே செய்துக் கொடுக்கிறது. அறிக்கையாண்டில் (ஜனவரி '2019) நடைப்பெற்ற ஆற்றுத் திருவிழா சுகாதார செலவிற்காக **ரூ. 6,50,000 /–** செலவிடப்பட்டது.

30. <u>குடிநீர் வசதி</u>

<u>சுத்திகரிக்கப்பட்ட அல்லது குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீர்</u>

இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்காக நகராட்சி அலுவலகத்தின் பின்புறம் 9.00 லட்சம் ,திருவதிகையில் 4.00 லட்சம் வி. ஆண்டிக்குப்பத்தில் 2.00 லட்சம் மூன்று மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு பகிர்மான குழாய் மூலமாக நகரில் பொதுமக்களுக்கு குடிநீர் விபியோகம் செய்யப்பட்டு வருகிறது. சுத்திகரிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் சுகாதாரத்தை அரசாணையில் அனுமதிக்கப்பட்டு ரூ10.00 லட்சம் செலவில் குடிநீர் வடிகால் வாரியத்தாரால் குடிநீர் திட்டவேலைகள் முடிவடைந்து 9 லட்சம் லிட்டர்கள் கொள்ளளவுள்ள மேல்நிலை குடிநீர்த் தொட்டி மற்றும் 4 ஆழ்துளை கிணறுகள் மூலம் அலுவலக பின்புறமும், 4 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை குடிநீர் தொட்டி திருவதிகையிலும் (இரண்டு ஆழ்துளை கிணறு மூலம்) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் வி.ஆண்டிக்குப்பம் 1.00 லட்சம் லிட்டர் கொண்ட மேல்நிலை தொட்டி செயல்பட்டு வருகிறது,

மேலும் எம்.யூ.டி.எப்.திட்டம் 1995–96ன் கீழ் திருவள்ளுவர் நகரில் 1.00லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியும், லட்சுபதி நகரில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டி மூலமாகவும் மற்றும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், 2003 – 04 ம் ஆண்டில் பதினாறாவது நிதிக்குழு பரிந்துரை திட்டத்தின் கீழ் கீழ் காணும் இடங்கள் தலா 0.30 லட்சம் லிட்டர் கொள்ளளவு செய்து குடிநீர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

1) தி. ராசாப்பாளையம் 3) சீரங்குப்பம்

2) ஆ. ஆண்டிக்குப்பம் 4) இருளங்குப்பம்

தமிழ்நாடு விட்டுவசதி வாரியத்தால் ஒப்படைக்கப்பட்ட 0.30 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

அறிக்கையாண்டில் குடிநீர் திட்ட பராமரிப்பிற்காக ரூ. 6.23 இலட்சம் .(பணியாளர் ஊதியம் உள்பட) செலவு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் ரூ.36.26 இலட்சம் வரவு வந்தது. 14.1.73 முதல் குடிநீர் திட்டத்தை நகராட்சியே நிர்வகித்து வருகிறது.

இந்நகராட்சியில் 47.95 கி.மீ.நீளமுள்ள குடிநீர் விநியோக குழாய் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி பத்து மேல்நிலைத் தொட்டிகளைத் தவிர கீழ்க்கண்ட இடங்களிலும் ஆழ்துளை கிணறுகள் அமைத்து நேரடி நீருந்து மற்றும் தரைமட்ட நீர்தேக்க தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

நகராட்சிக்கு சொந்தமான 7 பள்ளிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு இயந்திரம் 20.55 லட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2016–17 திட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளது. மேலும் 2016–17 ம் ஆண்டு குடிநீர் திட்டத்தின்கீழ் 33 வார்டுகளிலும் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணிக்கு ரூ. 150.00 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**<u>தரை மட்ட நீர் தேக்க தொட்டிகள்</u>**

1. தி. ராசாப்பாளையம்
2. சாமியார் தர்கா

**<u>நேரடி நீருற்று செய்யப்படும் இடங்கள்</u>**

1. அம்பேத்கார் நகர்
2. போலீஸ்லைன் 6வது தெரு
3. சென்ட்ரல் கிச்சன் (தீயணைப்பு நிலையம் அருகில்)
4. அவையாம்பாளையம்
5. சடையப்பபிள்ளைத் தெரு
6. வடமலை ராமசாமி தெரு
7. செக்குமேடு
8. மேலப்பாளையம்
9. ஆனைப்பிள்ளைதெரு
10. கஸ்தூரிபாய்தெரு
11. காமராஜர் நகர்
12. சத்தியமூர்த்தி தெரு
13. விழமங்கலம்
14. அன்வர்ஷா நகர்
15. தேவராஜ் நகர்
16. ஏரிக்கரை காலனி
17. செட்டிப்பட்டறை காலனி

மேலும் தட்டாஞ்சாவடி பனங்காட்டு தெரு, தண்டுபாளையம்காலனி பகுதிகள் 2 மின் மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் டேங்க் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

மின் தடை காலங்களில் தடை படாமல் குடிநீர் வழங்க மோட்டார் இயக்க அறிக்கையாண்டிற்கு முன்பு வறட்சி நிவாரணத் திட்டத்தில் அரசு மான்யமாக ரூ.14.00 லட்சம் பெறப்பட்டு நகராட்சி விநியோகத்திலிருந்து ரூ.4,31,000/– சேர்த்து செலவு செய்து 110 கே.வி.ஏ.ஜெனரேட்டர் ஒன்று அலுவலக பின்புறம் பகுதி–1ல் பொருத்தப்பட்டுள்ளது.

மேலும் எம்.யூ.டி.எப்.திட்டம் 17

1998–99ல் 60 கே.வி.ஏ. ஜெனரேட்டர் ரூ.3,87,000/– செலவு செய்து பகுதி –2 (திருவதிகை) மேல்நிலை தொட்டி வளாகத்தில் நிறுவப்பட்இயக்கத்தில் உள்ளது.

வீட்டு குடிநீர் இணைப்புகள் 6729 ( வீட்டு குடிநீர் இணைப்பு 6613 வணிகம் 116) இந்நிதியாண்டில் இணைப்புகள் 31.03.2019 வரை வழங்கப்பட்டுள்ளது. இந்நகரில் 178 பொதுக்குழாய்கள் உள்ளன. நகராட்சியால் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு செலவிடப்படும் தொகை ரூ. 0.082 ஆகிறது. மேலும் 1000 லிட்டருக்கு செலவினம் 0.82 பைசா ஆகிறது.

அறிக்கையாண்டில் 102 புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டது. 18 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலம் நாள் ஒன்றுக்கு 26.70 *LL* லிட்டர் சராசரியாக வழங்கப்படுகிறது. இது நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 90 லிட்டர் ஆகும். 16 இடங்களில் கூடுதலாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து குடிநீர் பகிர்மான குழாய்களில் நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மூலம் நேரடியாக நீர் உந்தப்படுகிறது. இதன் மூலம் 5,42,000 லிட்டர் வழங்கப்படுகிறது. மேல்நிலை தொட்டிகள் மற்றும் நேரடி நீருந்து மூலம் சராசரியாக நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

<u>31. வடிகால்</u>

இந்நகரில் உள்ள மொத்த கழிவுநீர் வடிகால் சுத்தம் செய்யும் பகுதிகள் மாவட்ட யானைக்கால் நோய் தடுப்பு திட்டம் பகுதியாளர்கள் மூலம் 2/3 பகுதி செய்யும் பணி நடைபெறுவதற்கு பொறுப்பு இருந்தாலும், நகர் முழுவதும் கழிவுநீர் வடிகால் சுத்தம் செய்யும் பணி மிக சிறப்பாக நகராட்சி மூலமாகத்தான் செய்யப்பட்டு வருகிறது.

இந்நகரின் சில பகுதிகளில் மட்டுமே திறந்த வடிகால் உள்ளது. இதன் நீளம்

27.25 கி.மீ. இவ்வடிகால்களை தினசரி சுத்தம் செய்து சீரான கழிவு நீர் வடிகாலுக்கு வகை செய்யும் வகையில் 12 வடிகால் சுகாதார பணியாளர்கள் பகுதியில் ஈடுபடுத்தப்பட்டது.

பாதாளச் சாக்கடை திட்டம் எதுவும் இந்நகராட்சியில் அமுலில் இல்லை. இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டி அரசுக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளது.

5. <u>வருவாய் வரத்தக்க முயற்சிகள்</u>

இத்தலைப்பின் கீழ் அறிக்கையாண்டில் மொத்த வருமானம் ரூ.76,95,000/– வருகிறது.

32. <u>போக்குவரத்து</u>

பொதுமக்கள் நலனை முன்னிட்டு தனியாராலும், அரசினராலும் பேரூந்துகள் பல முக்கிய மற்றும் கிராமப்புறம் தடங்களில் செல்கின்றன. இந்நகருக்கு தினந்தோறும் சுமார் 400 பேரூந்துகள் வந்து செல்கின்றன.

33. <u>அங்காடிகள்,வண்டிப்பேட்டை பேரூந்துநிலையம் மற்றும் ஆடு அறுக்குமிடம்</u>

அ. இந்நகராட்சியால் பராமரிக்கப்படு நாளங்காடி ஒன்று காந்திரோட்டில் உள்ளது. நகராட்சி எல்லைக்குள் வரும் பொருட்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு 2018–19 ல் ஏலம் விட்டதின்படி அறிக்கை ஆண்டு வருமானம் ரூ.2171844/— ஆகும். அங்காடியிலுள்ள நிரந்தர கடைகளுக்கு வாடகை கடை வாடகையால் ஆண்டிற்கு ரூ. 2171844/— வருமானம் ஆகும்.

நாளங்காடிகள் இடத்தை 25 வருடங்களுக்கு திரு ஏ.ஆர்.சி.தண்டபாணி செட்டியார் வகையறாவிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.90,000/— வீதம் வாடகைக்கு பெறப்பட்டுள்ளது. மேற்படி நாளங்காடி நகரமக்களின் தேவைக்கு போதுமானதாக உள்ளது. மேற்படி நாளங்காடிக்கு பொதுமக்கள் சிரமம் இன்றிசென்று வர ஏதுவாக 3வது மற்றும்நான்காவது வழிகள் திறக்கப்பட்டுள்ளது. மேலும் சந்தைமேம்பாடு திட்டத்தின் கீழ் மேற்படி நாளங்காடியில் ரூ.3.00 லட்சம் செலவில் சிமெண்ட்தளம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டில் பிளாட்பாரம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும்தனியாக ஆடு அடிக்கும் தொட்டியை தற்சமயம் உள்ள இறைச்சி மார்க்கெட் வளாகத்திலேயே அமைக்கப்பட்டு தனியாக வழி அமைக்கப்பட்டுள்ளது.

தனியாரால் நடத்தப்படும் நாளங்காடி மற்றும் சந்தைகள் எதுவும் இந்நகராட்சி எல்லைக்குள் இயங்கவில்லை.

ஆ. வண்டிப்பேட்டை எதுவும் இந்நகராட்சியால் நடத்தப்படவில்லை.

பி. <u>பேரூந்துநிலையம்</u>

கடலூர் சாலையில் உள்ள காலியிடத்தை, மேற்படி இடத்தின் டிரஸ்டியரான திருமதி நீலாவதி அம்மாளிடமிருந்து 99 ஆண்டிற்கு நீண்டகால குத்தகை மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.900/— வாடகைக்குப் பெறப்பட்டு இந்நகராட்சி பேரூந்துநிலையம் அதில் இயங்கி வருகிறது. இந்நகராட்சி பேரூந்துநிலையத்தை ‘பி‘ பிரிவு நிலையாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் தலைநகர் மற்றும் முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் பல பேரூந்துகள் சென்று வருவதுடன் கிராமப்புற மக்களின் வசதிக்காக பல கிராமப்புற பேரூந்து தடங்களிலும் பேரூந்துகள் சென்று வருகின்றன. வசூல் செய்வதற்கு குத்தகை மூலம் அறிக்கை ஆண்டில் ரூ.1300000/— வரவு ஆகும்.

பேருந்துநிலைய கட்டண கழிப்பறை மூலம் 2018–2019 ம் ஆண்டு வருமானம் ரூ.781673/– ஆகும். பேருந்து நிலையம் ஓடுதளம் முழுவதும் சிமெண்ட் தளமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

ஈ. ஆடு அடிக்கும் தொட்டி

இந்நகராட்சியால் அறிக்கை ஆண்டில் ஆடு அடிக்கும் இடம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது அறிக்கையாண்டிற்கு ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமையை ஏலம் விட்டதில் ரூ. 2,98,200 /– வருமானம் வரப்பெற்றது. ஆடு அடிக்குமிடம் பராமரிப்பிற்கு 2010–11 ஆண்டில் செலவு ஏதும் செய்யப்படவில்லை. பகுதி II திட்டத்தின் கீழ் புதியதாக ஆடு அடிக்கும் தொட்டி அமைக்க ரூ. 23.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

ஊ.தினசரி நாளங்காடி

தினசரி நாளங்காடி கட்டண கழிவறை 2018–2019ம் ஆண்டில் ரூ. 3,30,000/– வருமானம் ஆகும். மேற்கண்ட தினசரி நாளங்காடி 2018–2019ம் ஆண்டின் வருமானம்.

தொழிற்சாலைகளும்,தொழிலும்

1920ம் ஆண்டின் திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் கீழ் இயந்திர பிரிவு புதியதாக அனுமதி வழங்கவில்லை.

மயான மேம்பாடு

பகுதி II திட்டம் 2007–2008 ம் ஆண்டில் ரூ. 43.00 லட்சம் செலவில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்து.

2. பூங்காக்கள்

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட நான்கு பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வந்தன.

1. காந்திபூங்கா
2. திருவதிகை பூங்கா
3. ஏ.வி.சி.பூங்கா

மரம் நடுதல் பராமரித்தலும்,ஒரு பூங்காக் காவலரால் பராமரிக்கப்பட்டன. காந்தி பூங்காவில் 2015–16, 2016–17 ஆண்டுகளில் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் ரூ.52.00 லட்சம் செலவிடப்பட்டு காந்தி பூங்காவில் புல்வெளி, வழி நடை பாதை, OHT, காவலர் அறை செயற்கை நீரூற்று அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

34. நில அபிவிருத்தி

இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு நான்கு அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்கள் நடவடிக்கையிலுள்ளன.

1. கடலூர் சாலை நகர அபிவிருத்தித் திட்டம் எண்.1
2. மேலப்பாளையம் பகுதி நகர அபிவிருத்தித் திட்டம் எண்.2
3. மாற்றுப்பாதை பகுதி நகர அபிவிருத்தித் திட்டம் எண்.3
4. தட்டாஞ்சாவடி பகுதி நகர அபிவிருத்தித் திட்டம் எண்.4

இந்நகராட்சியில் முழுமைத் திட்டம் தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையில் 7.4.95ந் தேதிய அரசாணை எண்.444ன்படி அரசின்இறுதி அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் நகர அவிவிருத்தி கட்டணம் வீட்டு வசதி மற்றும் அபிவிருத்தி திட்டத்துறையில் 20.5.85ந்தேதிய அரசாணை எண்.497ன்படி 1.5.87ந்தேதி முதல் குடியிருப்பு உபயோகத்திற்கு நிலத்தில் 1 ச.மீட்டருக்கு 0.20பைசாவிலும் கட்டிடத்திற்கு 1 ச.மீட்டருக்கு 0.50பைசா வீதமும் வசூலிக்கப்பட்டு வந்ததை நகர அபிவிருத்தியை கருத்தில் கொண்டு 1.4.98 முதல் உயர்வு செய்ய நகரமன்ற தீர்மான எண்.75, நாள்:25.3.98ல் இறுதி அங்கீகாரம் அளித்ததன் பேரில் அபிவிருத்திக் கட்டணம் நிலத்திற்கு 1.ச.மீக்கு ரூ. 2.00/– வீதமும் கட்டிடத்திற்கு 1 ச.மீக்கு 1.00 ரூபாய் ஆகவும் திருத்தப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

1. 8.4.75ந்தேதிய 651 எண் உள்ளாட்சித்துறை அரசாணைப்படி நகரமைப்புச் சட்டம் பிரிவு 11(1)ன்படி நகராட்சி தனி உள்ளூர் திட்டப்பகுதியாக செயலாற்ற உத்திரவிடப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை மற்றும் இதர நகராட்சி பகுதிகளில் உள்ள வரை கடப்புகள் (ஆக்கிரமிப்பு) கடந்த ஆண்டு வரை

| | | |
|---|---|---|
| 1. அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் இருந்த அளவு கடப்புகள் | .... | இல்லை |
| 2. அறிக்கையாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட அளவு கடப்புகள் | .... | இல்லை |
| 3. அறிக்கையாண்டில் முடிவு செய்யப்பட்ட அளவு கடப்புகள் | .... | இல்லை |
| 4. அறிக்கையாண்டின் இறுதியில் இருந்த அளவு கடப்புகள் | .... | இல்லை |

அறிக்கை ஆண்டில் அனைத்து அளவு கடப்புகளும் காவல்துறை உத்திரவுடன் இடித்து அப்புறப்படுத்தப்பட்டன.

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதி மேம்பாடு</u>

ஆதிதிராவிடர்கள் அரசு ஆணைக்கிணங்க ஆதிதிராவிடர் இன மக்கள் இறந்தால் அவர்களுடைய இறுதி சடங்குகளைச் செய்து முடிக்க நபர் ஒன்றுக்கு ரூ.2,500/–வீதம் அரசு உதவி தொகையாக தடையின்றி வழங்கப்படுகிறது. அறிக்கையாண்டில் ஷை திட்டத்திற்காக அரசு மான்யமாக ஏதும்பெறப்படவில்லை.

<u>குடிநீர் தெருவிளக்கு</u>

ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதிகளில் போதுமான அளவு பொதுக் குழாய்களும் தெருவிளக்குகளும்போடப்பட்டுள்ளது. இவைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>சிறுசேமிப்பு</u>

**கடலூர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 20.11.2018 ந் தேதிய ந.க.எண். 3685/2018/அ1 ம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் ரூ. 75,000/– இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

38. <u>வருவாய் கணக்கு</u>

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட இடங்களிர் வரி நிர்ணயிக்கப்பட்டு . நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்–2) துறையின் 24.4.98 தேதிய அரசாணை (நிலை)எண்.64ன்படிக்கு ஐந்தாண்டுக்கு ஒருமுறை சொத்துவரி சீர்திருத்தம் செய்தல் 1.10.98 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டின் கேட்புத் தொகை ரூ.178.85 லட்சம் ஆகும்.

1. தமிழ்நாடு மாவட்ட நகர்மன்றச் சட்டம் 81வது விதியின்படி கட்டிடங்கள் மீது சொத்துவரி வருட வாடகை மதிப்பின் பேரில் கீழ்க்கண்ட விபரப்படி வசூலிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| அ. பொதுக் காரியங்களுக்கானது | .. | 2 ¼ % | அரையாண்டிற்கு |
| ஆ. தண்ணீர் & சாக்கடை வரி | .. | 5 % | ‘‘ |
| இ. விளக்கு வரி | .. | 2 ¾% | ‘‘ |
| ஈ. கக்கூஸ் வரி | .. | 1 % | ‘‘ |
| உ. கல்வி வரி | .. | 2 1/2% | ‘‘ |
| ஊ. நூலக வரி | .. | 0.10% | |
| **மொத்த வரி விகிதம்** | .. | 13 .60 % | ‘‘ |

2. நூலக வரி பொது காரியங்களுக்கான வரியில் ரூபாய்க்கு 0.10 பைசா வீதமும், நகராட்சி எல்லைக்குட்பட்ட காலிமனைகளுக்கு நகராட்சி சட்டம் விதி 81(3)ன் கீழ் மூலதன மணிப்பின் பேரில் கீழ்க்கண்டவாறு காலிமனைவரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மூலதன மதிப்பில் சொத்துவரி | | 1/4 % | அரையாண்டிற்கு |
| ‘‘ | தண்ணீர் வரி & வடிகால் வரி | 1/4 % | ” |
| ” | விளக்கு வரி | 1/16 % | ” |
| ‘‘ | கக்கூஸ் வரி | 1/16 % | ” |
| ‘‘ | கல்வி வரி | 1/8 % | ” |
| | | 5/8 % | ” |

3. 19.3.1981ந்தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.434ன்படி நகராட்சி எல்லைக்குட்பட்ட விளை நிலங்களுக்கான வரியை அரசு 1.4.81 முதல் நீக்கப்பட்டது.

3ஏ. நகராட்சியின் நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கை எண்.35,நாள்:25.9.90ன்படி இந்நகராட்சி எல்லைக்குள் ரூ.180/– வருட வாடகை மணிப்பு உள்ள வீடுகளுக்கு விதிக்கப்பட்டவரியினங்களை 1.10.90 முதல் தள்ளுபடி செய்ய உத்திரவிடப்பட்டதின் பேரில் மன்றத் தீர்மானம் எண்.431, நாள்:30.10.90ன்படி நகரிலுள்ள வரிவிதிப்புகளில் ஆண்டு வாடகை மதிப்புரூ.180/– வரையிலுள்ள வரி விதிப்புகள் 1.10.90 முதல் வரி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

4. <u>தொழில்வரி</u>

1998ம் ஆண்டில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920க்கு சட்ட திருத்தம் இயற்றப்பட்டு சட்டம் 59/98ன் அடிப்படையில் புதிய தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

<u>வரிச்சுமை:–</u>

1. எல்லா வரிகளில் மொத்த வரிச்சுமை மக்கட் தொகையில் நபர் ஒன்றுக்கு .. ரூ. 311.00
2. சொத்துவரியில் ஒரு கட்டிடத்திற்கு விதிக்கப்பட்ட சொத்துவரி .. ரூ.1375.00
3. மொத்த தொழில்வரி ஒரு நபருக்கு விதிக்கப்பட்ட தொழில்வரி .. ரூ. 300. 00
4. அரசு மான்யம் இல்லாமல் மொத்த வருமானம் நபர் ஒன்றுக்கு .. ரூ. 274.00
5. அரசு மான்யத்தை சேர்த்து மொத்த வருமானம் நபர் ஒன்றுக்கு .. ரூ. 442.00

<u>நிதி நிலமை</u>

<u>31.03.2018 வரியினங்களின் நிலுவை</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | சொத்துவரி | .. ரூ. | 301.65 இலட்சம் |
| 2. | காலிமனைவரி | ரூ. | 9.73 லட்சம் |
| 2. | தொழில்வரி | .. ரூ. | 132.08 இலட்சம் |
| 3. | குடிநீர் கட்டணம் | – ரூ. | 6118.18இலட்சம் |
| 4. | வரியில்லா இனங்கள் | – ரூ. | 99.08 இலட்சம் |

| கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|
| நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| <u>சொத்துவரி</u> | | | | | |
| 23605 | 40508 | 58.23 | 149.40 | 177.81 | 255.68 |
| <u>தொழில்வரி</u> | | | | | |
| 130.65 | 46.93 | 4.55 | 21.67 | 127.32 | 24.00 |
| குடிநீர் வரி | | | | | |
| 118.12 | 81.50 | 35.91 | 38.91 | 82.22 | 42.99 |
| வரியில்லா இனங்கள் | | | | | |
| 81.79 | 103.99 | 36.18 | 60.40 | 96.59 | 54.62 |

<u>வரியற்ற இனங்கள்</u>

அறிக்கையாண்டின் கேட்பு வசூல் நிலுவை விபரம் பின்வருமாறு:

**2018–2019**

| | கேட்பு. | | வசூல். | | தள்ளுபடி | |
|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| குடிநீர் கட்டணம் | 118.12 | 81.50 | 35.91 | 38.91 | 82.22 | 42.99 |
| அச்ச அருவருதக்க இனம். | – | – | – | – | – | – |
| உணக் கலப்பட கட்டணம் | – | – | – | – | – | – |
| கட்டிட உரிமம் | –– | – | – | – | – | – |
| நகர அபிவிருத்திக் கட்டணம் | –– | – | – | – | – | – |
| தினசரி சந்தை | | 5.32 | | 3.20 | | 2.11 |
| பேரூந்து நிலையம் | – | 11.32 | | 11.32 | – | – |
| ஆடு அடிக்கும்தொட்டி | – | 3.29 | | 1.69 | – | 1.60 |
| கடை வாடகை | 81.79 | 103.99 | 36.18 | 60.40 | 96.59 | 54.62 |
| இதர வருவாய் | –– | –– | –– | –– | –– | –– |
| குப்பை கூளங்கள் | –– | –– | –– | –– | –– | –– |
| பேரூந்து நிலைய பணியாளர் ஊதியம் | –– | –– | –– | –– | –– | –– |
| பே.நிலைய சைக்கிள் ஸ்டாண்டு | – | –– | –– | –– | –– | –– |

<u>பள்ளி சத்துணவு</u>

பயணடையும் பிள்ளைகள்

1. வகுப்பு 1 முதல் 5 வரையிலான பிள்ளைகள் – 679
2. வகுப்பு 6 முதல் 8 வரையிலான பிள்ளைகள் – 318
3. வகுப்பு 9 முதல் 10 வரையிலான பிள்ளைகள் – 172

––––––––

– 1169

– –––––––

<u>அங்கன்வாடி, பள்ளிசத்துணவு கூடங்களின் எண்ணிக்கை</u>

அங்கன்வாடி மையங்கள் –22 எண்ணிக்கை

பள்ளி சத்துணவு மையங்கள் –11 எண்ணிக்கை

இச்சத்துணவுத் திட்டத்ற்குதேவையான அரிசி,பருப்பு, எண்ணெய் போன்ற உணவுப் பொருள்கள் மாவட்ட ஆட்சியர் (சத்துணவு பிரிவு) அவர்களின் உத்திரவின் பேரில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தினரால் அறிக்கையாண்டில் வழங்கப்பட்டது. சத்துணவுத் திட்ட மையங்களுக்கு தினசரி சமையல் செலவினங்களுக்காக குழந்தை ஒன்றுக்கு மான்யம்0.80 பைசா வீதம் 2017–18ல் செலவிடப்படுகிறது. இந்த குழந்தைகளுக்கு நபர் ஒன்றுக்கு 43.50 பைசா வீதம் செலவிடப்பட்டது. இத்திட்டம் 1.10.2008 முதல் மாவட்ட ஆட்சியர் கடலூர் அவர்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியாளருக்கு ஊதியம் மற்றும் இதர செலவினங்கள் மாவட்ட ஆட்சியாளர் அனுமதித்து கருவூலக பட்டியல் மூலம் செலவிடப்படுகிறது. மேலும் நடப்பாண்டில் சத்துணவு நிதியின் கீழ், நகராட்சியில் அனைத்து சத்துணவு கூடத்தினையும் மராமத்து பணிகள் ஏதும் மேற்கொள்ளவில்லை.

<u>2000–2001ம் ஆண்டு முதல் புதிய கணக்கு முறை நடை முறைப்படுத்துதல்</u>

அரசு ஆணை எண்.3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை (நநி2) நாள்12–1–2000 ன்படி இந்நகராட்சியில் 1–4–2000 முதல் புதிய கணக்கு முறை (New Accounting system) நடைமுறைப்படுத்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கிணங்க அதனை இந்நகரமன்ற தீன்மான எண் 96 நாள் 29–03–2000 அனுமதிக்கப்பட்டு இந்நகராட்சியில் 1–4–2000 முதல் புதிய கணக்கு முறைகான அதாவது 2000–2001ம் ஆண்டு கணக்கு புதிய கணக்கு வைப்பு முறைகளின்படி தயார்செய்யப்பட்டுள்ளது மேலும் கீழ்கண்டுள்ள தலைப்புகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

1) வருவாய் நிதி
2) குடிநீர் மற்றும் வடிகால் நிதி
3) (மூலதனக் கணக்கு
4) கல்வி நிதி
5) (நூலக வரி
6) வாம்பே
7) தேசிய குடிசை மேம்பாட்டு நிதி

40. <u>வருவாய் நிதி (2017–2018)</u>

அறிக்கை ஆண்டில் வருவாய் நிதியிலிருந்து செலவுத் தொகை சாதாரணம் ரூ.932.19 லட்சம்

அறிக்கையாண்டில் அரசிமிருந்து பெறப்பட்ட மான்யம் மற்றும் உதவித் தொகைகள் பின்வருமாறு:–

1. சாலைகள் பராமரிப்பிற்கு (சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி .. ரூ. **70.00 லட்சம்**

––––––––––––––

மொத்தம் ரூ. 1002.19 லட்சம்

––––––––––––––

41. <u>மூலதனச் செலவு (201–18)</u>

இத்தலைப்பின் கீழ் அறிக்கையாண்டில் ஏற்பட்ட செலவு ரூ. 735.84

-----------

ரூ. 735.84

-----------

42. <u>கடன்</u>

அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் இருந்த அரசு மற்றும் தமிழ்நாடு நகரவளர்ச்சி நிதி தமிழ்நாடு நகர நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம்

TNUDF & TUFIDCO கடன் தொகை .. ரூ. 10541167

அறிக்கையாண்டில் திருப்பி செலுத்தப்பட்ட தொகை
அறிக்கையாண்டு இறுதியிலுள்ள கடன் தொகை .. ரூ. 8808494

அறிக்கையாண்டில் அரசு கடனுக்காக செலுத்தப்பட்ட

வட்டித் தொகை .. ரூ. 1017895

<u>டெபாசிட்</u>

1. ஒப்பந்தக்காரர்கள் .. ரூ. 128.17

2. பணியாளர்கள் மற்றும் இதர இனங்கள் – ரூ. 882.44

-------------

மொத்தம் .. ரூ.1010.61

-------------

43. <u>முதலீடுகள்</u>

அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் இருந்த முதலிட்டுத் தொகை

. ரூ. 372.43

புதியதாக முதலீடு செய்யப்பட்டது. .. இல்லை

அறிக்கையாண்டில் முதிர்ச்சி அடைந்து பெறப்பட்டதொகை

.. ரூ. ---

முடிவிலிருந்த முதலீட்டுத் தொகை .. ரூ. 372.43

| | நிலுவை வரி பாக்கி | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| 1. வரியினங்கள்– சொத்துவரி | 166.94 | 227.32 | 394.26 |
| – தொழில்வரி | 128.49 | 28.89 | 157.39 |
| 2.வரியற்ற இனங்கள் | | | |
| –குடிநீர் கட்டணம் | 81.37 | 41.52 | 123.25 |
| –குத்தகை இனம் | 4.96 | 15.01 | 19.97 |

மொத்தம்

அறிக்கையாண்டில் வருவாய் வந்தது. .. ரூ. 1693.98 இலட்சம்

அறிக்கையாண்டில் ஆரம்ப இருப்பு .. ரூ. 902.57 இலட்சம்

அறிக்கையாண்டின் செலவு .. ரூ. 969.01 இலட்சம்

அறிக்கையாண்டின் முடிவிருப்பு .. ரூ. 723.97 இலட்சம்

## 44. தணிக்கை

அறிக்கையாண்டில் 2018–2019 ம் ஆண்டுக்கான கணக்கு தணிக்கை செய்யப்பட்டது.

தணிக்கையாண்டின் ஆரம்பத்தில் இருந்த தணிக்கைத் தடைகள் .... 1837
அறிக்கையாண்டில் தணிக்கைத் தடைகள்நிவர்த்தி செய்யப்பட்டவை ... 887
நிலுவையிலுள்ள மொத்த தணிக்கைத் தடைகள் ... 1837 தணிக்கைத் தடைகள்
பண்ணுருட்டி நகராட்சியில் 2018–19 ம் ஆண்டு வரை மொத்தம் 1837 தணிக்கை தடைகள் உள்ளது

| | | |
|---|---|---|
| 2018–2019 முடிய மொத்த எண்ணிக்கை | – | 1837 |
| மண்டல இணை இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கடிதத்தின்படி தணிக்கை பத்தி நீக்கம் | – | 887 |
| **மொத்த நிலுவையிலுள்ள பத்திகள்** | | **950** |

## 45. வழக்கு

அறிக்கையாண்டு முதல் கீழ்க்கண்டபடி வழக்குகள் நிலுவையில் இருந்தன.

| | | |
|---|---|---|
| 1. 31.03.2019 ல் நிலுவையிலிருந்தது வீட்டுவரி | .. 77 | குத்தகை இனம் .. 8 |
| அறிக்கையாண்டில் தொடர்ந்த வழக்கு | .. –– | |
| 3. அறிக்கையாண்டில் முடிந்த வழக்குகள் | .. –– | |
| 4. 31.03.2019 நிலுவையிலுருந்து வழக்குகள் | .. 0 | |
| வீட்டு வரி | .. ரூ. 69.20 இலட்சம் | |
| இதர இனம் | .. ரூ. 9.36 இலட்சம் | |
| 5. வழக்குகளால் கவரப்பட்ட மொத்த தொகை | .. ரூ. 78.56 இலட்சம் | |

### கணிப் பொறி மயமாக்கல்

நகராட்சி நிர்வாகத்தை கணிபொறிமயமாக்க முடிவெடுத்து பண்ணுருட்டி நகராட்சிக்கு 3 கணிப் பொறிகளும் 2 பிண்டர்களும் நவம்பர் 97ல் வழங்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை ந.க.எண்.88735 /97/ஜெ4, நாள்:214.5.99ன்படி கீழ்க்காணும் பணிவேடுகளை கணிப் பொறி மயமாக்குதல் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டது. பிறப்பு பதிவேடு, இறப்பு பதிவேடு, சொத்துவரி பதிவேடு, தண்ணீர் வரி பதிவேடு கட்டிடம் மற்றும் வரைபட பதிவேடு, ஆபத்து விளைவிக்கும் பொருள் பதிவேடு, வாகனப் பதிவேடு, இயங்கும், இயங்கா சொத்து பதிவேடு மேலும் பிறப்பு இறப்பு சான்றில் இறப்பு சான்றிதழ் ஆபத்து விளைவிக்கும் பொருள் அனுமதி சொத்துவரி, தொழில்வரி கட்டிட வரைபட அனுமதி வழங்குதல் மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவை இணையதளத்திலேயே சான்றிதழ் பெறலாம் மற்றும் இணையதளத்திலேயே கட்டணம் செலுத்த வசதிகள்செய்யப்பட்டுள்ளது.

கீழ்கண்ட நகராட்சி இனங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன

1. பிறப்பு, இறப்பு சான்று வழங்குதல்
2. சொத்துவரி வசூல்
3. தண்ணீர் வரி வசூல்
4. தொழில் வரி வசூல்
5. பணியாளர் சம்பள பட்டியல்
6. இயல்பு நிலைக் கணக்குப் பதிவேடு
7. வாகன விவரங்கள்
8. ஆபத்து மற்றும் அபாயகரமான வரிக்கும் தொழில் வரி வசூல்
9. இயங்கும் மற்றும் இயங்கா சொத்து விவரங்கள் விவரம்
10. இதர இனங்கள்.

**விவரம்**

வடகைலாசம் கிராமம், வார்டு பி, பிளாக் 13, நகரளவு எண்கள் 61,62,73,74 மற்றும் 92.

| வ. எண். | கிரயம் பெற்ற சதுரடி இடம். | நகரளவு எண்கள். | கிரயம் பெற்ற செலவுத் தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1. | 1575 | 61 | 2,14,200/– |
| 2. | 1482 | 62 | 2,46,753/– |
| 3. | 1643 | 73 | 2,23,448/– |
| 4. | 1764 | 74 | 2,39,904/– |
| 5. | 381 | 92 | 51,816/– |
| | 6845 சதுரடி | | 9,76,121/– |

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் வளர்ச்சி திட்டப்பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கிய துறைச்சார்ந்த செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மாவட்ட ஆட்சியர் மற்றும் இதர துறை உயர் அலுவலர்களுக்கும் பண்ணுருட்டி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் , இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அனைத்து முக்கிய பிரமுகர்கள் பொதுமக்கள் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆணையாளர்(கூ.பொ)
பண்ணுருட்டி நகராட்சி.